5. அறிக்கை அளித்தல்

உரிமைக் குழு

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9—2—1983 ஆம் தேதியன்று பேரவைத் தலைவர் அவர்களால் உரிமைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட பிரச்னை குறித்து உரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 6 சட்ட முன்வடிவுகள் ஊராட்சிகள் பற்றி இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதித்தால் கடைசியாகப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றைத்தனித் தனியாக நீங்கள் மொழியுங்கள். அதற்குப் பிறகு விவாதத்தை பொதுவாக வைத்துக் கொள்ளலாம்.

(அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச்சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ''.

---

* 1983 ஆம் ஆண்டு மார்ச் 4-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.